**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973 and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No.44/2007 P.W.6/L.W.10**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திருமதி. டாக்டர். வசந்தகுமாரி | **Calling** | : | |
| **Father's Name** | : | க/பெ. | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 07.02.2024.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**4 வது குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜர். 1 ம் குற்றம் சுமத்தப்பட்ட நபர் ஆஜரில்லை. மேற்படி ஆஜரின்மை நீதியின் நலன் கருதி கு.வி.மு.ச 1973 பிரிவு 317(1)ன் கீழ் அனுமதிக்கப்படுகிறது. குற்றம் சுமத்தப்பட்ட நபர் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

**1.** நான் தற்போது துணை இயக்குநராக மருத்துவத்துறையில் பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று விட்டேன். இதற்கு முன்பு நான், குளச்சல் அரசு மருத்துவமனையில் 15.01.2007 ம் வருடம் பணி மருத்துவராக இரவு பணியில் இருந்த போது, இரவு 11.50 மணி அளவில், மிடாலக்காடு, பாலப்பள்ளத்தை சேர்ந்த, 34 வயதுடைய சுதீர் என்பவரின் மனைவி பத்மா என்பவர் அவர் தன்னை, தன்னுடைய கணவர் அவருடைய வீட்டில் வைத்து கம்பால் தாக்கியதாக கூறி என்னிடம் சிகிச்சைகக்காக வந்தார். நான் அவரை பரிசோதித்து பார்த்ததில், வலது கை முட்டின் கீழ் பக்கம் 4 மரக்கட்டை துண்டுகள் வைத்து கட்டப்பட்டு கழுத்துடன் சேர்த்து தொங்கு கயிறுடன் காணப்பட்டது.

2. நான் அவரை பரிசோதித்த போது அவருக்கு வெளிக்காயங்கள் எதுவும் இல்லை. நான் அவரை ஆசாரிபள்ளம் அரசு மருத்துவமனைக்கு மேல்சிகிட்சைக்காக பரிந்துரைச் செய்தேன். அங்கு அவருக்கு நுண்கதிர் படம் எடுக்கப்பட்டதில் Head of Radius fracture காணப்பட்டது. அதனைப் பொறுத்து நான் கொடுங்காயம் என்று சான்று அளித்தேன். மேற்படி கருத்துரையுடன் கூடிய விபத்து பதிவேடு அ.சா.ஆ.2 ஆகும். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>குறுக்கு விசாரணை</u>** :

**1.** நான் எலும்பு முறிவு மருத்துவர் அல்ல. காயம்பட்ட நபருக்கு நான் சிகிட்சை அளிக்கும் போது வீக்ககாயம் எதுவும் இல்லை என்று சொன்னால் சரிதான். காயம்பட்ட நபருக்கு எடுக்கப்பட்ட எக்ஸ்ரே - ஐ நான் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. காயம்பட்ட நபருக்கு அவருக்கு நான் பரிசோதித்த போது வலி இருந்ததாக நான் சொல்லவில்லை என்றால் சரிதான். அவருக்கு வலி இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

2. அவருக்கு வலி இல்லை என்பதை நான் குறித்திருக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. 30 முதல் 40 வயதுடைய ஒரு நபர் தடுமாறி பின்னால் விழும்போது மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உண்டு என்று சொன்னால் இல்லை. காயம்பட்ட நபருக்கு நான் முழுவதுமாக சிகிட்சை அளிக்காத காரணத்தினால் நான் கருத்துரை வழங்க இயலாது என்று சொன்னால் சரியல்ல. காயம்பட்ட நபர் படிக்கட்டில் இருந்து நிலை தடுமாறி கீழே விழும்போது மேற்படி காயம் ஏற்பட வாய்ப்பு உண்டா என்றால் - வாய்ப்பு உள்ளது.

குறுக்கு விசாரணை - முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.